ICCM-2017

# PROCEEDINGS

## 4th International Conference on Contemporary Management

"Inspiring Pledge for Sustainability Over Challenges"

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka
25th & 26th July, 2017

©Copy Right : 2017 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.

Published by : Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.

URL : www.jfn.ac.lk/iccm

e-mail : iccmuoj@gmail.com

T.P : 0094(0)212223610

Printers : Guru Printers, Thirunelvely, Jaffna, Sri Lanka.

ISSN : 2448-9883

Disclaimer:

Responsibilities for content of the full papers included in the publication remain with respective authors.

Proceeding of International Conference on Contemporary Management - 2017 (ICCM-2017), pp 187 - 193

# சமகாலத்தில் இந்துக்கோயில்களின் நிர்வாகமும், முகாமைத்துவமும் - முல்லைத்தீவு மாவட்ட இந்துக்கோயில்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

ரமணராஜா. சி[1], டனோஜினி. மோ[2]

## ஆய்வுச்சுருக்கம்

இந்து சமுதாய மையங்களாக இந்துக்கோயில்கள் விளங்குவதனால், இந்துக் கோயில்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இந்து சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினை களாகக் கருதி அவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இத்தகையதோர் பின்புலத்தில் "இந்துக்கோயில்களின் நிர்வாகமும் முகாமைத்துவமும் - முல்லைத்தீவு மாவட்ட இந்துக்கோயில்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" எனும் இவ்வாய்வானது தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் படும் ஆய்வாக அமைகின்றது.

இந்துப்பண்பாட்டியல் ஆய்வு என்ற வகையில் இந்து சமுதாய மையங்களாக விளங்குகின்ற இந்துக்கோயில்களின் நிர்வாக முகாமைத்துவம் தொடர்பிலான கரிசனை இந்த ஆய்விற்கான முக்கிய தூண்டற்ப்புள்ளியாக அமைகின்றது.

திறவுச்சொற்கள் - இந்துக்கோயில்கள், பிரச்சினைகள்,சிவாகமம்,நிர்வாகம், முகாமைத்துவம்.

## அறிமுகம்

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இற்றைக்காலம் வரை சைவத்தின் பல்வேறு பிரிவுகளும், கூறுகளும் நடைமுறையிலுள்ளன. அம்மரபில் சைவ மக்களது நிலைக்களன்களான சிறப்பினை எடுத்துக் காட்டுகின்ற இடங்கள் திருக்கோயில்கள் மற்றும் சமய நிறுவனங்களாகும். சைவ மக்களது வாழ்வியலில் அவர்களது பிறப்புரிமையாகவும், மரபுரிமையாகவும் சமயம் என்பது கொள்ளப்படுகின்றது. சமயமரபில் இந்துக்களென்னும் எவ்வித பாகுபாடுகளுமின்றி ஒன்றுபட்டு ஆத்ம லாபத்தினை ஈட்டும் பொருட்டு வழிபடுகின்ற இடங்களே கோயில்களாகும். ஒவ்வொரு கோயில்களும் தமக்குரிய மரபுரிமைகளையும் ஒழுங்குகளையும் காலத்துக்கு காலம் பேணி ஒழுங்கமைத்து வருகின்றன. மரபு மாறாத சிறப்புடன் கோயில்களை பராமரித்தலே திருக்கோயில்களின் முகாமைத்துவம் எனப்படும்.

இலங்கையிலே சிவாகமம் சார்ந்த மரபும், கிராமியம் சார்ந்த மரபும், நாட்டார் வழக்கியல்களும் திருக்கோயில்களின் பாரம்பரியத்துக்கு அடிப்படையாய் அமைகின்றன. இதனடிப்படையில் இலங்கையில் காணப்படுகின்ற ஏனைய சமயங்களோடு ஒப்பிடுகையில் இந்துத்

[1]இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.
[2]இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம். Danomohan@gmail.com

திருக்கோயில்கள் அரசிற்கு சொந்தமுடையதாக இல்லாமல் பொதுமைப்படுத்தப்பட்ட தனியுடைமைச் சொத்தாகவோ, சமூகக்கட்டமைப்புடைய சொத்தாகவோ, பொதுச் சொத்தாகவோ விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வகை கோயில்கள் பிரதேசத்துக்கு பிரதேசம் மாறுபட்ட வழிபாடுகளையும், நிர்வாகத்தையும் தனித்துவமாகக் கொண்டு விளங்குகின்றன. தமிழர்கள் செறிந்து வாழும் வடமாகாணத்தில் ஒரு மாவட்டமாக அமைவது முல்லைத்தீவு மாவட்டம். இம்மாவட்டத்தில் அண்மையில் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் 179 கோயில்கள் உள்ளன.[1]

கோயில் வழிபாட்டு மரபில் பழமை குன்றாமலும், பாரம்பரியம் சிதைந்து போகமலும் பாதுகாக்க வேண்டிய கட்டமைவு நிர்வாகத்தினற்கே உரியதாகும் அத்தகு நிலையில் நிர்வாகங்கள் காலத்துக்கேற்ற நிலையில் புதிய பரிமாணங்களை கொண்டு செல்லவேண்டியதும் கட்டாயமாகும்.

**ஆய்வின் எல்லையும்,முறையியலும்,நோக்கமும்**

கடந்த முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக பல்வேறு விதமான மனத்தாக்கங்களுக்கும், மன உளைச்சல்களுக்கும் மத்தியில் தம்மை மீளநிலை நிறுத்திக் கொண்டிருக்கும் முல்லை மக்கள் மத்தியிலுள்ள கோயில்கள் பல நிர்வாக முரண்பாடுகளைக் கொண்டிருப்பதனால் அவை அம் மக்களின் நம்பிக்கைகள், சடங்குமுறைகள் போன்றவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்திலே புத்துவெட்டுவான் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரன் ஆலயம், வற்றாப்பளை கண்ணகையம்மன் ஆலயம், மம்மில் பிள்ளையார் ஆலயம்,தண்ணீரூற்று ஊற்றங்கரை சித்தி விநாயகராலயம் என்பன ஆய்விற்கான தேரந்தெடுக்கப்பட்ட மாதிரியாகக் காணப்பட்டபோதும், நிர்வாகவியல் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டும் போது ஆலயத்தின் சமூக நிலைப்பாட்டிற்காகவும், நிர்வாகத்தினரின் உளநிலையைக் கருத்திற் கொண்டும் ஆலயங்கள் ஏதுவும் தனியாகச் சுட்டிக்காட்டப்படவில்லை.[2]

வினாக்கொத்து, நேர்காணல், தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு இடையிலான கலந்துரையாடல் போன்ற தகவல் சேகரிப்பு முறைகளை பயன்படுத்தி களஆய்வாக மேற்கொண்ட போதும், சேகரிக்கப்பட்ட தரவுகள் பொருத்தமான சந்தர்ப்பங்களில் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கு உள்ளாக்கப்படும். அத்தோடு தேவையேற்படின் வரலாற்று ஆய்வுமுறை மற்றும் விபரண ஆய்வுமுறை என்பனவும் கைக்கொள்ளப்படும்.

இங்கே தெரிவு செய்யப்பட்ட திருக்கோயில்கள் தனித்தவர், ஒருகுழுமத்தவரால் ஒழுங்கமைவு செய்யப்படுபவை, பொது நிர்வாகக் கட்டமைவு உடையன எனும் ரிதீயாலும், பிரதேசத்துக்கு ஒரு கோயில் எனும் எண்ணக்கரு அடிப்படையிலும் தேர்வு

செய்யப்பட்டன.மக்கள் நன்மைக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும், உலக நன்மைக்காகவும் நடாத்தப்படும் பூசை வழிபாட்டு முறைகளை குறைவின்றி நடாத்துதலென்பது நிர்வாகத்தின் முக்கிய பங்கும் பணியுமாகும். இறைவனுக்குப் பணிந்து இறைபணி செய்வதில் தம்மை ஈடுபடுத்துதல் அல்லது அர்ப்பணித்தல் என்பது கோயில் பரிபாலனம்சார் பணிகளுள் தலையாய கடமையாகும். இவ்வகையில் கோயில் சார் பூசைகள், வருமானங்கள், அன்றாட நடைமுறைகள், எதிர்காலத்திட்டமிடல்கள் என்பனவற்றை உரியமுறையில் காலத்துக்கேற்ற வகையான முறையில் மேற்கொள்ள வேண்டியதான சுமை நிர்வாகத்தில் கடமை புரிகின்ற அனைவருக்கும் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் இறைசேவையாகிய பரிபாலனம் செய்யவர்களது சேவைகளும் பணிகளும் சமூகத்தவர்களால் எதிர்பார்க்கப்படுகின்றன. அத்தகைய சேவைகளை சேவைகளாக எந்தளவிற்கு கோயில் பரிபாலனம்சார் நிர்வாகிகள் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர் என்பதனையும், அவை எவ்வகையில் சவால்கள் நிறைந்த சமூகத்தையும் மரபுகளையும் எதிர் கொள்கின்றன என்பதனையும் ஆராய்தலே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் அவசியம்**

மக்களின் மனத்தையும் அவர்களது வாழ்க்கை முறையையும் வழிப்படுத்தி ஒழுங்கான சமூகக் கட்டமைப்பினையும் மரபுகளையும் ஏற்படுத்துவதில் சமயத்தின் வகிபாகம் பெரியளவினதாகும். அச்சத்தின் அடிப்படையிலும் இயற்கையிலிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகள், வளங்கள் என்பவற்றின் பின்னணியிலும் வழிபாடும் அதனோடிணைந்த சடங்கு முறைகளும் சமயத்தின் கூறுகளாக பரிணமித்தன.

இத்தகு நிலையிலே நாடோடி வாழ்கை வாழந்த மனிதன் தான் நிலையான வாழ்க்கை வாழ உறைவிடத்தை அமைத்துக் கொள்ளும் போது தங்களைக் காத்துக்கொள்ளும் சக்திகளுக்கும் உறைவிடம் அமைக்கத் தொடங்கினான். அவ்வாறு அமைக்கும் போது வளங்கள் நிறைந்த இடங்களினைத் தேடி ஆலயங்களை அமைத்துக் கொண்டனர். இதனால் ஆதிகாலத்திலிருந்து ஆலயங்களை மையமாகக் கொண்டு சமூக மேம்பாடு ஏற்படலாயிற்று.இந்து சமுதாய மையங்களாகவும் கோயில்கள் விளங்குகின்றன.

ஆலயம் என்ற பதம் அலைகின்ற மனதை ஒருவழிப்படுத்தி மெய்மறந்து தியானத்தில் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை ஈடுபடுத்தி வழிபாடு இயற்றப்படும் இடம் என்பதனைச் சுட்டுகின்றது. எம்மைச் சுற்றி நடைபெறும் கருமங்கள் யாவும் இறையருள் உணர்வை வெளிப்படுத்துவனவாக உள்ளன. தமிழர்களின் பண்பாட்டிலே சமயம் சார்ந்த உணர்வுகளும் நம்பிக்கைகளும் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. அவற்றின் நிலைக்களன்களாகத் திகழ்பவை கோயில்கள் இக்காரணத்தால் ஈழத்தமிழர் பண்பாட்டை கற்றறிய முயல்பவர்கள் அவற்றோடு ஒட்டிய வாழ்க்கை முறைகளையும் கற்றல் அவசியமாகின்றது.

இந்துக்கோயில் ஒவ்வொரு ஊருக்கும் அவசியமென்பதனை அப்பர் சுவாமிகள்

" திருக்கோயிலில்லாத திருவிலூரும்.........

அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே..."[4] என்கிறார்.

மனதை லயப்படுத்துவதில் கோயில் பிரதான இடத்தை வகிப்பதால் இந்து மதத்தின் அச்சாணியாக கோயில் வழிபாடு விளங்குகின்றது.

தொடக்கத்தில் அழியும் பொருட்களால் கட்டப்பட்ட இந்து கோயில்கள் வட இந்தியாவில் குப்தர் காலத்திலும் (கி.பி 4 – 5ம் நூற்றாண்டு) தென்னிந்தியாவில் பல்லவர் காலத்திலும் (கி.பி 6 –8ம் நூற்றாண்டு) அழியாப் பொருட்களினால் தோன்றலாயின. வழிபாட்டிடங்களாகத் தோன்றிய இந்துக் கோயில்கள் அக்காலக் கலைஞர்களின் கலைத்திறனை வெளிக்காட்டும் கலைக்கூடங்களாகவும், கல்வி, மருத்துவம் போன்றவை நிகழுமிடங்களாகவும், சகல மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிறுவனங்களாயும் திகழ்ந்தன.

வழிபாடு நடைபெறும் இடம் நிறுவனமயப்படும் போது சமூக நியமங்களின் பெறுமானங்கள் மாறுதலிற்கான ஒன்றாக அமையும். அத்தோடு அந்நிறுவனம் சம்பந்தப்பட்ட ஒரு சமூத்தின் பொதுப்படையான கட்டமைவுகளிற்கு உட்பட்டதாகவே இருப்பதோடு அதிகார வைப்பு முறைகளுடன் தொடர்புபட்டதாய் அமையும்.[5] இவை இவ்வாறு கட்டமைக்கப்படுவதற்கு திருக்கோயில்களில் ஒழுங்குகளும் கட்டுப்பாடுகளும் அவசியம். இத்தகைய ஒழுங்குகளை அடியார்கள் மதித்து நடக்கச் செய்வதற்காக ஒரு அமைப்பு தேவைப்பட்டது. அத்தகு தேவைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பினை கோயில் நிர்வாகம் என்பர்.

நிர்வாகம் என்பதனை நோக்குகையில் காடுகளில் காய்கனிகளை உண்டு திரிந்த மனிதன் காடு திருத்தி களனிகள் அமைத்த பொழுதே உணவுக்கு அலையாமல் இருந்த இடத்திலேயே உணவுப்பொருட்களை விளைவிக்க முயன்ற பொழுதே பொருட்கள், கருவிகளைச் செய்வது, சேர்ப்பது, பயன்படுத்துவது, சக மனிதர்களுடன் சேர்ந்துபாடுவது என்ற நிலையில் நிர்வாகவியல் பிறந்துவிட்டது.

நிர்வாகவியல் முன்னோடிகள் என்ற பெருமைக்குரியவர்கள் மேலைநாடுகளைப் பொறுத்தவரை சுமேரிய நாட்டு மதகுருமார்களும் கோயில் பூசாரிகளும்[6] சமய உணர்வு மிக்க சமுதாயம் அது சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்பே அங்கே மக்களிடம் வரிகள் வசூலிப்பது கோயிலுக்கு சொத்துக்கள் வாங்குவது அவற்றை நிர்வகிப்பது போன்ற வேலைகளை மதகுருமார்களும் கோயில் பூசாரிகளுமே செய்து வந்திருக்கின்றனர். இதனை ஆதாரமாகக் கொண்டு ஏழாயிரம் வருடங்களுக்கு முன்பு எண்ணும் எழுத்தும் நிர்வாகவியல் தேவைக்காக உருவாக்கப்பட்டன என்கிறார் "தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ளும் மனிதன் என்ற நூலை எழுதிய அறிஞர் வி.ஜி. சைல்ட.[7]

நிர்வாகம் என்பது குறிக்கோள்களுடன் ஆற்றப்படும் பணிகள் கூட்டுச் செயல்பாடுகள் எனலாம். அதே நேரத்தில் அம்முயற்சியோ செயல்களோ அறிவு பூர்வமாக இருக்கவேண்டும். கூட்டுச் செயற்பாடுகள், மனிதனையும் கருவிகளையும் மேலாண்மை செய்வதாகவும் இருக்க வேண்டும். சமுதாய வாழ்க்கை பலவிதத்திலும் பரந்துபட்ட நிலையில் நியதிகள் கூட்டங்கள் என்பனவற்றால் வழிநடத்தப்படுகின்றன. மனிதனும் சமுதாயமும் இணைந்த நோக்கில் நிர்வாகம் ஒரு அடி நாதமாக விளங்குகின்றது. சமுதாயத்தின் ஒவ்வொரு கூறுகளிலும் நிர்வாகத்தின் தாக்கத்தைக் காணலாம். நிறுவமைப்பும் மேலாண்மையும் நிர்வாகச் செயற்பாட்டின் சிறப்பம்சங்களாகும். பகுத்தறிவு உடையதான கூட்டுமுயற்சி மட்டுமே நிர்வாகம் என்பதில் அடங்கும்.

நிர்வாகம் என்பது நிறுவனத்தின் பிரதான இலக்குகளையும் கொள்கைகளையம் தீர்மானிக்கின்ற முகாமைத்துகக்குழுவின் உயர் மட்ட செயற்பாடுகளைக் குறிப்பது. நடைமுறைப்படுத்துவதாகும். அதாவது நிர்வாகம் முகாமைத்துவத்துள் அடங்கும் சிறிய பணியாகும். முகாமைத்துவ இலக்குகளை நிறைவேற்றிக் கொள்கைகளையும், திட்டங் களையும் திறமையான முறையில் செயற்படுத்த உதவும் செயற்பாட்டினை நிர்வாகம் எனலாம். எனவே முகாமைத்துவ செயற்பாடுகள் சரி வர செயற்படுத்தப்படுகின்றனவா எனப் பார்வையிடுவதாகவே நிர்வாகம் கொள்ளப்படுகின்றது. நடைமுறையில் முகாமைத்துவம் நீண்ட காலத்துடனும் நிர்வாகம் குறுகிய காலத்துடனும் தொடர்புடையதாகக் கருதப்படுகின்றன. அதன் காரணமாக நிர்வாகம் சரி வர இயங்கினால் முகாமைத்துவம் திறமையாக நடைபெற வாய்ப்பளிக்கும் என நம்பப்படுகிறது.நிர்வாகம், முகாமைத்துவம் ஆகிய இரு சொற்களும் ஒன்றுடனொன்று தொடர்புடையனவாகக் காணப்படினும், அவை இரண்டும் வேறுபட்ட கருத்துக்களை குறிக்கும் பதங்கள்.[8] இவ்விரண்மையும் முதன் முதலில் வேறுபடுத்தியவர்.

**அடிக்குறிப்புக்கள்**

1. சோமசேகரன், வை.,(தொ.ஆ.), 2015,ஈழத்து ஆலயங்கள், அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு. ப. 29.
2. நேர்காணல், - சி. மோகனராசா, 15.03.2017, மு.ப. 10.00 கலாசாரஉத்யோகஸ்தர், ஒட்டுசுட்டான்.
3. வித்தியானந்தன்,சு.,
4. அப்பர் தேவாரம், பா.எ 6.95.5.
5. சிவத்தம்பி.கா.,2003,நக்கீரம், சட்ட மாணவர் இந்து மகாசபை, கொழும்பு. ப .6.
6. நடராஜன்,ஆர்., 2007,நிர்வாகவியல் வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. ப.24.
7. மேலது. ப.25.

8. தணிகாசலம்பிள்ளை, ச.நா., 1999,கல்வி நிர்வாகம், தணிகை பதிப்பகம், இலங்கை. ப. 25
9. ரதிராணி, யோ., 2011,முகாமைத்துவ தத்துவங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு. ப. 18.
10. மேலது. ப. 7.
11. சாந்தினி, அ.,2016,அனைத்துலக சைவ மாநாடு, இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.ப. 545.
12. சாந்தினி,அ.,2016,சிந்தனை, கலைப்பீடம்,யாழ் பல்கலைக்கழகம். ப.80.
13. கைலாசபிள்ளை, த, 1995, (பதி. ஆ.),ஆறுமுகநாவலர் பிரபந்த திரட்டு, வித்தியானு பாலனயந்திர சாலை, சென்னை. ப. 28- 37.
14. சிவத்தம்பி.கா.,2003,மு.கு.நூ.ப. 9.
15. மகேஸ்வரன், வ., 2008,சோழர்கால கோயிலும் சமூகமும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு. ப.72.
16. சுகந்தினி, சி.,2012, **JUICE,** University of Jaffna. ப. 247.
17. சாந்தினி,அ.,2016,மு.கு.நூ. ப. 81.
18. நவரத்தினம், க., 1949,இந்து ஆலய சீர்திருத்தம்,ஈழகேசரி, (ம.பி), சுன்னாகம். ப. 8.
19. திருமந்திரம் பா. எ 1342
20. சாந்தினி,அ.,2016,மு.கு.நூ. ப. 546.
21. இந்து சமய ஆலயங்களின் பரிபாலனத்துக்கான வழிகாட்டிக் கைநூல், 2014, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. ப. 8.
22. மேலது. ப. 9.
23. ராஜலிங்ககுருக்கள். ஆர்,நித்தியார்ச்சனாவிதி (கராணகமம்), தமிழ் நாடு ப.2.
24. கைலாசநாதக்குருக்கள்,கா., 2009,சைவதிருக்கோயில் கிரியைநெறி, கைலாசநாதக்குருக்கள், கா. யாழ்ப்பாணம். ப.148.
25. சுகந்தினி, சி.,2012, மு.கு.நூ. ப. 250.

## உசாத்துணைகள்


இந்து சமய ஆலயங்களின் பரிபாலனத்துக்கான வழிகாட்டிக் கைநூல், 2014, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

கைலாசபிள்ளை, த, 1995, (பதி. ஆ.),ஆறுமுகநாவலர் பிரபந்த திரட்டு, வித்தியானு பாலனயந்திர சாலை, சென்னை.

கைலாசநாதக்குருக்கள், கா., 2009,சைவதிருக்கோயில் கிரியைநெறி, கைலாசநாதக் குருக்கள், கா. யாழ்ப்பாணம்.

சாந்தினி, அ.,2016,அனைத்துலக சைவ மாநாடு, இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

சாந்தினி, அ., 2016,சிந்தனை, கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்.

சிவத்தம்பி. கா., 2003,நக்கீரம், சட்ட மாணவர் இந்து மகாசபை, கொழும்பு.

சுகந்தினி, சி.,2012, **JUICE,** University of Jaffna.

சோமசேகரன், வை.,(தொ.ஆ.), 2015,ஈழத்து ஆலயங்கள், அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு.

தணிகாசலம்பிள்ளை, ச.நா., 1999,கல்வி நிர்வாகம், தணிகை பதிப்பகம், இலங்கை.

நடராஜன்,ஆர்., 2007,நிர்வாகவியல் வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

நவரத்தினம், க., 1949,இந்து ஆலய சீர்திருத்தம்,ஈழகேசரி, (ம.பி), சுன்னாகம்.

மகேஸ்வரன், வ., 2008,சோழர்கால கோயிலும் சமூகமும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

ரதிராணி, யோ., 2011,முகாமைத்துவ தத்துவங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

ராஜலிங்கருக்கள். ஆர்,நித்தியார்ச்சனாவிதி (கராணகமம்), தமிழ் நாடு.